Date.08.04.2026.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம் **)**

விழுப்புரம்**.**

OS.3/2015

பி**.**வா**.**சா**. 3**

பெயர்**.** திரு**.**பச்சையப்பன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை**:-**</u>

எனக்கு வாதி மற்றும் பிரதிவாதிகளை சுமார் 15 வருடங்களாக பழக்கம். எனக்கு பிரதிவாதி சொந்தமில்லை. நான் அவர் வீட்டிற்கு பக்கத்தில் டீ சாப்பிட போவேன். அவரும் அந்த டீக்கடையில் வந்து டீ சாப்பிடுவார் அப்படி எங்களுக்குள் பழக்கம். நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரம் என்ன பத்திரம் என்று எனக்கு தெரியும். நான் சாட்சி செய்த பத்திரம் என்ன வகையான பத்திரம் என்றால், அந்த ஆவணம் உயிலா அல்லது தானபத்திரமா என்று நான் கவனிக்கவில்லை. எனக்கு படிக்க தெரியாது. நான் படிக்கவில்லை. நான் மொத்தம் ஒரு கையெழுத்து தான் போட்டேன். நான் மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து போட்டேன். நான் எத்தனை மணிக்கு கையெழுத்து போட்டேன் என்றால் நான் கையெழுத்து போடும்போது சுமார் 3.00 மணி இருக்கும். நான் கையெழுத்து போடும்போது தினகரன் கையெழுத்து போட்டார். தினகரனும் நானும் கையெழுத்து போட்டோம். நாங்கள் பத்திரபதிவு அலுவலகத்திற்கு செல்லும் போது மணி சுமார் 1.00 இருக்கும். நாங்கள் கையெழுத்து செய்த தேதி பந்த் என்பதால் நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். காலையில் பஞ்சாயத்து நடந்தது. நான் போகும்போது அங்கு கூட்டம் கலைந்து விட்டது. பஞ்சாயத்து 1ம் பிரதிவாதி சங்கரின் வீட்டிலேயே நடந்தது. பஞ்சாயத்தில் விஜயராம செட்டியார், தினகரன்,

கருணாநிதி சுப்பிரமணியன் ஆகிய நான்கு பேர் இருந்தார்கள். பஞ்சாயத்திற்கு நான் போனேன். ஆனால் நான் போகும்போது கலைத்து விட்டார்கள். பேசி முடித்து விட்டார்கள். அதனால் நான் அங்கிருந்து வந்து விட்டேன். பஞ்சாயத்தில் என்ன பேசப்பட்டது, என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால், என்ன பேசினார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குள் பேசி சமாதானம் செய்து கொண்டார்கள். பத்திரம் 3 அல்லது 4 மணிக்கு பதிவானது. 2012 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதால் எனக்கு தற்போது சரியாக ஞாபகம் இல்லை. என்னை பத்திரத்தில் சாட்சி சொல்ல யார் கூப்பிட்டது என்றால், தினகரன் கூப்பிட்டார். நாங்கள் இருவரும் சேர்ந்து தான் வெளியில் சென்றோம். பாபு செட்டியாருக்கு தினகரன் வேண்டியவரா? என்றால் அவர்கள் இருவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். எனக்கு சாட்சி கையெழுத்து செய்தது பற்றி எதுவும் தெரியாது என்றும், பஞ்சாயத்து பேசியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சி கையெழுத்து செய்த பத்திரத்தை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்றும், பாபு செட்டியார் எனக்கு வேண்டியவர் என்பதால் அவர் சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சி கையெழுத்து எடுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

<u>இல்லை.</u>